ADIC/TN/301/21-7-25

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சமவாய்ப்பு பிரிவு

15.07.2025

**சுற்றறிக்கை**

பொருள் : கல்வி உதவித்தொகை பிரிவு - 2025-2026-ஆம் கல்வியாண்டில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் (BC/MBC/DNC) வகுப்பை சார்ந்த மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை வேண்டி புதுப்பித்தல் மற்றும் புதியதாக விண்ணப்பித்தல்-தொடர்பாக

*******

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், மற்றும் சிறுபான்மையினர் வகுப்பை சார்ந்த மாணாக்கர்கள் 2025-26-ஆம் கல்வி ஆண்டிற்கான போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை வேண்டி புதுப்பித்தல் (Renewal) மற்றும் புதியதாக (Fresh) விண்ணப்பிக்க தங்களது சாதி மற்றும் வருமான சான்றிதழ்களில் TN-000 000 000 000 00 பதினான்கு இலக்க எண் கொண்ட சாதி மற்றும் வருமான சான்றிதழ்கள் இல்லை எனில் உடனடியாக e-சேவை மையங்கள் மூலம் விண்ணப்பித்து, புதிய சான்றிதழ் பெறுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் (BC/MBC/DNC) கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து தேவையான ஆவணங்களை இணைத்து துறைத்தலைவர் பரிந்துரையோடு கல்வி உதவித்தொகை “H1” பிரிவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பிக்க புதுப்பித்தல் (Renewal) 29-08-25-ஆம் தேதியும் புதியதாக (Fresh) விண்ணப்பிக்க 30-09-25 ஆம் தேதியும் கடைசி நாளாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பதிவாளர் (பொ)

பெறுதல் :

1. புல முதல்வர்கள்
2. அனைத்துத் துறை தலைவர்கள் (தகவல் பலகைக்கு மற்றும் வகுப்புகளில் அறிவித்திட வேண்டப்படுகிறது)
3. இயக்குநர், அண்ணாமலைப் பல்கலைக்கழக எண்ணியல் தகவல் மையம் (இச்சுற்றறிக்கை மற்றும் படிவத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும்)
4. ஒருங்கிணைப்பாளர்கள், சமவாய்ப்பு பிரிவு
5. விடுதி ஒருங்கிணைப்பாளர் & அனைத்து விடுதி காப்பாளர்கள் (அனைத்து விடுதி அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டப்படுகிறது).

நகல்:

1. துணைவேந்தர் குழு நேர்முக செயலாளர்
2. பதிவாளர் நேர்முக உதவியாளர்
3. அலுவலக கோப்பு